உ
சிவமயம்



துன்னாலை வாசரும்
இலங்கை மின்சார சபையின் ஓய்வு பெற்ற
பிரதம எழுதுவினைஞருமாகிய
உயர்திரு.

# சின்னப்பா வேலும்மயிலும்

அவர்களின்

# நினைவு மலர்

துன்னாலை வடக்கு,
கரவெட்டி,
வடமராட்சி,
யாழ்ப்பாணம்.
29-11-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வடமராட்சி
வடதுன்னையம்பதி வாசரும்

திரு. அருணாசலம் சின்னப்பா அவர்களின்
சிரேஷ்ட புத்திரனும்

துன்னாலை காசிநாத வித்தியாசாலை ஸ்தாபகர்
திரு. மயில்வாகனம் காசிநாதர் அவர்களின்
இளைய மருமகனும்

துன்னாலை காசிநாதர் வித்தியாசாலை
முன்னாள் ஆசிரியை

## திருமதி வே. இலட்சுமிஅம்மா

அவர்களின் அன்புக் கணவருமாகிய

உயர்திரு.

# வேலும்மயிலும்

அவர்களின் மறைவு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திரு. சின்னப்பா வேலும்மயிலும்

(சேனாதி)

அவர்கள்



தோற்றம்:
**16-03-1926**
செவ்வாய்க்கிழமை

மறைவு:
**30-11-2000**
திங்கட்கிழமை

*திதி நிர்ணய வெண்பா*

*விக்கிரம ஆண்டு மழை பொழியும்*
*ஐப்பசித் திங்கள் சந்தித்த பூர்வபக்க திருதியையே*
*எங்கள் வேலும்மயிலும் எமைவிட்டுப் பிரிந்து*
*தூய மனநிறைவு பெற்ற திருநாள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறைப் பாடல்கள்

## தேவாரம்

மூன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருக்குவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே.

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடமை எல்லாமுங்
குன்றை யனையாய் என்னை யாட்கொண்ட போதே
கொண்டிலையோ
இன்னோர் இடையூறெனக்குண்டோ எண்டோள் முக்கண்
எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற வுழறி யுமைமண வாளனுக்காய்ப்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகரம் மூன்றுவிழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி யஞ்சலி செய்கிற்பாம்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே,

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்னாலை வடக்கு வடமராட்சி
# உயர் திரு. சி. வேலும்மயிலும் அவர்களின்
# வரலாற்றில் சில துளிகள்.

வேப்பம் பூ மணம் கமழும்
வேதியர் நிறைந்து வாழும்
மா பனை தென்னை மலிந்து வளரும்
வயல் வளம் சூழ்ந்திருக்கும்
பழம் பெரும் ஊராம் துன்னாலையில்
சின்னப்பா வள்ளியம்மை இல்லற வாழ்வில்
சிரித்து மகிழ வேலும்மயிலும்
சிரேஷ்ட புத்திரனாய் வந்துதித்தார்

வல்லியானந்தப் பிள்ளையார் துணையிருக்க
தாய் தந்தையர் உடனிருக்க
நவரத்தினசாமி, கனகரத்தினம், செல்வவிநாயகம்
தம்பியர் துணையிருக்க
லோகநாயகி பத்மாவதி
தங்கையர் தயவிருக்க
தனயனாய் தமயனாய் வேலும்மயிலும் தளர்விலா
துடிப்புடன் துணிவுடன் வளர்ந்திட்டார்.

ஆரம்ப கல்வியை அம்மாவின் கந்தோர் பள்ளியில்
ஆங்கிலக் கல்வியை திரு இருதயக் கல்லூரியில் கற்று
இதன் பரிசாக அரச எழுதுநர் பதவி பெற்று
அன்பிற்கினிய அவர் தம் மைத்துனி
ஆசிரியை இலட்சுமி அம்மாவை
ஆரத் தழுவி இல்லறம் நடத்தி
ஆனந்தமாய் இன்புற்றிருக்கும் வேளையில்
இராஜலட்சுமி, இராஜேஸ்வரி, காசிதாசன்
ஜெயலட்சுமி, சிவசுப்பிரமணியம் எனும்
நன் மக்களைப் பெற்று நலமுடன் வாழ்ந்திட்டார்.

தம்பியர் தங்கையர் தம்பிள்ளைகள் திருமணம்
தரணியில் சிறப்புடன் தானே நடத்தி
தரணியில் அவர்கள் சிறப்புடன் வாழ
தன்னால் ஆன அனைத்தும் செய்திட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கைத் தொழில் திணைக்களத்தில்
சிறப்புடன் சேவையாற்றி
சீருடன் தம் ஊர் திகழ்ந்திட
கிராம முன்னேற்றச்சங்க, நெசவாலைக்
கட்டிடங்கள் கட்டிட, பொதுக் கிணறு
பெற்றிட பெரிதும் உதவிட்டார்.
இலங்கை மின்சாரத் திணைக் களத்தில்
இயல்புடன் சேவையாற்றி
இவ்விடத்தில் மின் இணைப்பும் பெற்றிட்டார்.

மூத்தமகள் அடுத்த மகள் இங்கிருக்க
மூத்தமகன் டுபாயிலிருக்க
இளைய மகன் இளைய மகள் லண்டனிலிருக்க
அவர் தம் குடும்பங்கள் அங்கங்கிருக்க
தம் சுற்றம் அவனியெங்கும் பரவியிருக்க
தாத்தா என்றழைத்து தரிசிக்க ஆண்டுதோறும்
மக்கள், மருமக்கள், மைத்துனர், பேரப்பிள்ளைகள்
மாறி மாறி வந்து செல்ல
ஆனந்தமாய் தன் மனையாளுடன்
அருகருகாய் வாழ்ந்து வந்தார்.

உதிரத்தின் உறவுகள் இங்கிருக்க
இரத்தத்தின் இரத்தங்கள் அங்கிருக்க
அவர்கள் அனைவரையும் அவனியில்
ஒரே பார்வையில் ஒரே நாளில் காண்பது எப்படி;
என்ற ஏக்கம் உடனிருக்க!
விண்ணிலிருந்து காண்பதே ஒரே வழி!!
என எண்ணி எழுபத்தைத்தாம் வயதில்
விரைந்து சென்றார் விண்ணுலகம்!!!

தம்பி நவரத்தினசாமி தங்கை பத்மாவதி அழைப்புவிட
மகன்மார் துடி துடிக்க
இளைய மகன் ஏக்கித் தவிக்க
மருமக்கள் கதிரமலை, கமலநாதன் உடனிருக்க
முருகநாதன், சாந்தினி, மதிவதனி அன்பிருக்க
பேரப்பிள்ளைகள் கிருஷசாந்தி, கிரிதரன் தீப்பந்தம்-ஏந்த
கஜேந்திரன், ஜனனி. கிர்ஷ்னி, அச்சுதன்
சிந்துஜன், சுஜேன் வெளிநாட்டிலிருந்து வேதனையுற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரும், உறவும், நட்பும் கூடியிருக்க
மனைவி, மக்கள், தம்பி மற்றும் பலரும்
அழுது புலம்ப ஆண்டு இரண்டாயிரம்
ஐப்பசி மாதம் கந்தஷஷ்டி மூன்றாம் நாள்
அவனியை விட்டகன்றார் வேலும்மயிலும்.

# அபிராமி அம்மைப் பதிகம்

சௌராஷ்டிரம் — கண்டசாபு

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாரத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்

சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமுங் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்

அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகாகவி கம்பர் அருளிச் செய்த

## சரஸ்வதியந்தாதி

காப்பு

நேரிசை வெண்பா

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை — தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப் பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச் செவ்வாயுங்
கடிக மழ்பூந்தாமரை போற்கையுந்—துடியிடையு
மல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி.

### மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள்

அருளிச் செய்த

## நவராத்திரிப் பாட்டு

**பராசக்தி**

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே!
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப் பணிந்து வாழ்வோமே.

**வாணி**

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணி முத்தைப் போல அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதால்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே.

**ஸ்ரீதேவி**

பொன்னரசி நாரணனார்தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம் போல் மேனியழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

**பார்வதி**

மலையிலேதான் பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்ந்திடுவாள் நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்தி சூடி

**காப்பு**

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே**

1. அறம் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டுண்
10. ஒப்புர ஒழுகு

# கொன்றை வேந்தன்

**காப்பு**

**கொன்றை வேந்தன் செல்வன் அடியினை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே**

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
4. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்.
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
7. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
8. ஏவா மக்கள் மூவா மருந்து.
9. ஐயம் புகினும் செய்வன செய்.
10. ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமஸ்மரணையின் சக்தி

1 ''கரடும் முரடும் முள்ளும் நிறைந்த பாதை வழியே மனிதன் தனது கால்களை இழுத்துச் செல்வதே இந்த வாழ்க்கை என்னும் பிரயாணம். உதடுகளில் கடவுளின் நாமம் கூட இருக்கும் போது அவனுக்கு தாகமேதுமிராது, அவனது இருதயத்தில் கடவுளின் ரூபம் கூட இருக்கும் போது அவன் களைத்துச் சோர்வடையும் உணர்வே இராது. சாதுக்களின் சகவாசம் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் பிரயாணத்தைச் செய்யத் தூண்டி உற்சாகப்படுத்திவிடும், கூவி அழைக்கும் தூரத்தில் கடவுள் இருக்கிறார். அவர் என்றும் அருகே இருக்கிறார். வருவதற்கு அவருக்கு நீண்ட நேரம் எடுக்காது என்ற விழிப்புணர்வு அவனது அவயங்களுக்கு பலத்தைக் கொடுத்து கண்களுக்கு உற்சாகத்தையும் ஊட்டுகிறது. மனக்கண் முன்னால் அவரது ரூபத்தை நிலை நிறுத்தி அவரது மதத்தை பிரேமையுடன் ஸ்மரியுங்கள். அது உங்களுடைய இருதயக் குகையில் வெளிச்சத்தை உண்டாக்கும். அதுஅக இருளையும் வெளியிருளையும் கூட அங்கிருந்து ஓட்டிக் கலைத்து விடும். அகத்துள் சாந்தியும் புறத்தில் பிரேமையும் - இதுவே இடை விடாது நாமஸ்மரணையில் ஈடுபட்டுள்ளவரின் அடையாளம் ஆகும்,''

2 ''கடவுளின் நாமம் உதயசூரியனின் கண்ணைக் கூசும் பிரகாசத்தைப் போன்றது. அது அறியாமை என்ற இருளை விலத்துகிறது. அது தெய்வீகத்தைப் போல் பிரபஞ்சமளாவிய பிரகாசம் கொண்டது. அசுரர்களால் சித்திரவதை செய்யப் படுகையில் பிரகலாதன் கடவுளின் நாமத்தை உச்சரித்தபோது அசுரர்களின் இருதயங்களை வெற்றி கொண்ட அந்த நாமத்தின் வல்லமையை நினைத்துப் பாருங்கள். பிரகலாதனுடன் சேர்த்து அசுரர்களின் பிள்ளைகளும் நாமத்தை ஸ்மரித்ததுடன் அவனால் வழிநடத்தப்பட்டபோது தங்களுடைய தலைவனை பாதுகாப்பதற்காக நாமத்தைத் தாங்கும் ஆயுதபாணிகளாகி ஆனந்தத்துடன் அவர்கள் பாடி நடனமாடத் தொடங்கினார்கள். அசுர இயல்பை உருமாற்றி பிரேமாமிர்தமாக அதைப் பரிசுத்தமாக்கக் கூடிய கடவுளின் நாமம், உண்மையிலேயே எல்லோருக்கும் முழு உலகுக்குமே சாந்திக்குரிய திறவுகோலாகும்,''

3 ''நாமஸ்மரணை எங்களுக்கு எதைச் செய்கிறது? அதுவே தாரணோபாயமாகும். பந்தமும் பாசமும் அறியாமையும் என்ற சமூத்திரத்தைக் கடக்கும் இலகுவான வழி அது. (வியக்தியிலிருந்து) தனி ஒருவரிலிருந்து சக்தியை இப்போது மறைக்கும் மாயத்திரையை நாமம் அகற்றுகிறது. இத்திரை மறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டதும் மனிதன்தானே தனக்குள் இருக்கும் தெய்வீகத்தை கண்டு கொள்கிறான். பிரபஞ்சத்தையும் தன்னையும் ஒன்றாகப் பார்க்கிறான். மனிதனிடம் எல்லையில்லாத சக்தியும் எல்லையில் லாத தகுதியும் உள்ளது. ஏனென்றால் எல்லையில்லாத சமுத்திர மான சத் சித் ஆனந்தத்தின் ஒரு அலையே மனிதனாகும்.''

4 ''இழப்பு அல்லது பேரிடி போன்று தோற்றுவதிலிருந்து நீங் கள் மனமுடைந்திருக்கும்போது நாமஸ்மரணையில் உங்களை ஈடு படுத்துங்கள். அது ஆறுதலையும் உற்சாகத்தையும் அந்தச் சம்ப வத்தின் அல்லது நிலமையின் உண்மையான விளக்கத்தையும் தரும். அத்துடன் கடவுளின் அநுக்கிரகத்தைப் பெறுவதற்கும் கடவுளின் பிரசன்னத்தைக் கண்டறியவும் மிகவும் பெறுமதி வாய் ந்த கருவியே தெய்வீக நாமம், அது இருதய ஆழத்திலிருந்து ஸ்ம ரிக்கப்பட்டவுடன் உங்களுடைய வீட்டைக் குகைக்குப் பதிலாக கிருகமாக மாற்றக் கூடிய பெறுமதி வாய்ந்தது. கடவுளின் நாமம் என்னும் விளக்கு கொழுத்தப்பட்டதும் அது முழு கிரகத்தையுமே பிரகாசிக்கச் செய்ய வல்லது ஆனபடியால்தான் துளசிதாஸ் கோஸ்வாமி ஒரு முறை சொன்னதில் ஆச்சரியமேதுமில்லை. 'வீட் டுக்கு வெளியேயும் அதே நேரத்தில் உள்ளேயும் வெளிச்சம் உங்க ளுக்கு வேண்டுமா? அப்படி என்றால் வீட்டு வாசற்படியில் விள க்கை வையுங்கள்'' அதே போல உங்களுக்குள்ளேயும் வெளியே யும் சாந்தியின் பிரகாசத்தை பரப்ப விருப்பப்படுகிறீர்களா? அப் படியென்றால் உங்களது உடலின் வாசற்படியான நாக்கில் விள க்கை வைத்து விடுங்கள். நாக்கில் உள்ள இந்த விளக்கு மினுமினு க்கவோ அல்லது மங்கவோ அல்லது எந்தப் புயலாலும் அணைக் கப்படவோ மாட்டாது.'' அது உங்களுக்கும் தன்னருகே வரும் அனைவருக்கும் ஏன் உண்மையில் இந்த முழு உலகுக்குமே சாந்தி யை வழங்கும்''

5 ''நாமஸ்மரணை பக்தி ஞானம் கர்மம் போன்ற யோகங்க ளைப் போல ஒன்று என்று சொல்லலாம். அதை சித்தசுத்தி யோகம் என்று சொல்லலாம். நாமத்திலிருந்து பிறந்து வெளிப் படும்தெய்வீக சக்தியால் காலத்தில் ஒவ்வொரு வினாடியையும் வலுவூட்டுங்கள். எல்லா நேரகளிலும் எல்லா சந்தர்ப்ப சூழ் நிலைகளிலும் கடவுளின் நாமத்தை அன்போடும் பக்தியோடும் நினைப்பதைப்பயிற்சி செய்யுங்கள். மலைமலையானபாவங்களை துகள்துகளாக்கும் இடியேறு நாமம் ஆகும். மோகம் என்னும் பயங்கரமான வியாதிக்கு அதுவே நிச்சயமான மருந்து. பிறப்பு இறப்பு என்னும் தளையிலிருந்து அது உங்களை விடுவிக்க வழி காட்டுவதுடன் அழியாத பேரானந்தத்தையும் தரும். ஆனபடி யால் நாமஸ்மரணை என்ற சாதனை மூலம் சத்தியத்தைத் தேடு வதுக்குச் சங்கல்பம் எடுக்குமாறு உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவர்
திரு. சின்னப்பா வேலும்மயிலும் அவர்களின்
இறுதிச் சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கும்
பல்வேறு வழிகளில் உதவி செய்தவர்களுக்கும்
மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும்
தொலைபேசியில் ஆறுதல் கூறியவர்களுக்கும்
வருகை தந்த உயர் தொழில்நுட்ப நிறுவன,
இலங்கை போக்குவரத்துச் சபை சார்ந்த
உத்தியோகத்தர்களுக்கும், கல்வி சார்ந்த
உத்தியோகத்தர்களுக்கும் உற்றார் உறவினர்
நண்பர்களுக்கும்
எமது இதய பூர்வ நன்றிகள்.

இன்றைய அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகளில்
கலந்து கொண்டவர்களுக்கும் எமது
இதயபூர்வ நன்றிகள்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
29-11-2000

குடும்பத்தினர்

மாசிலா அச்சகம், நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்ததி வர

மாப்பாணர்
+
மீனாட்சி

அருணாசலம்
+
இளையபிள்ளை

வள்ளியம்மை — சின்னப்பிள்ளை — பொன்னையா

சின்னப்பா — நாகமுத்து (பெண்) — சின்னாச்சி — பாறுபதி — சின்ன

வேலும்மயிலும்

நவரத்தினசாமி + பத்மாவதி

குணரத்தினம் + சகுந்தலா

செல்வவிநாயகம் + சுந்தரி

லோகநாயகி + சுந்தரலிங்கம்

பத்மா + கதிரவே

கனகசபாபதி + வள்ளியம்மா

செ

செ

இராஜலட்சுமி + கதிரமலை

இராஜேஸ்வரி + கமலநாதன்
கிரிஷ்சாந்தி
கிரிதரன்


காசிதாசன் + சாந்தினி
கஜேந்திரன்
ஜனனி

ஜெயலட்சுமி + முருகநாதன்
கிர்ஷனி
அட்சுதன்

சிவசுப்பிரம
மதிவ
சிந்
க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ... வரலாறு



மயில்வாகனம்
+
புதுநாச்சன்
...பதி
சின்னையா
ஏகாம்பரம்
காசிநாதர்
வேலுப்பிள்ளை
சிதம்பரப்பிள்ளை
பார்வதி
தெய்வானை
சிதம்பரம்
பத்மாவதி
+
கதிரவேல்
...பதி
செல்லம்மா
+
செகராஜசிங்கம்
நமசிவாயம்
+
மதுரைமீனாட்சி
இலட்சுமிஅம்மா
...ம்மா
...சுப்பிரமணியம் (ஆனந்தன்)
+
மதிவதனி
சிந்துஜன்
சுஜேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org